## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.18/2019

பெயர் – தர்மலிங்கம்(வா.சா.1)

நாள் – 08.08.2025

**2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1) எனது தகப்பனாருக்கு சொந்த ஊர் கத்தாளம்பட்டி கிராமம் என்றால் சரிதான். சிறு வயதிலேயே எனது தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் எனது அப்பா வேறு திருமணம் செய்து வேறு ஊரில் குடிபெயர்ந்தார் என்றால் வேறு திருமணம் செய்தாரே தவிர கத்தாளம்பட்டியிலேயே குடியிருந்தார். தாவா சொத்து குறித்து எனது தகப்பனாருக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆன அறிவிப்பில் தாவா சொத்து எனக்கும் எனது பெரியம்மாவுக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்டதாகவும், பின்பு தாத்தா மல்லப்பரெட்டியார், மாரியப்ப ரெட்டியாரிடமிருந்து கிரையம் பெற்றதாகவும், பின்னர் 1945 கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி பாத்தியப்பட்டது என்று கூறியது எனக்கும், எனது சின்னம்மாவிற்கும்.

2) வா.சா.ஆ.7 ஆன அறிவிப்பு அனுப்பிய சமயத்தில் வா.சா.ஆ.1 எனது கையில் இல்லை என்றால் சரிதான். மல்லப்ப ரெட்டியார் எனது அம்மாவின் தாத்தா என்பதற்கான ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.7 ஆன அறிவிப்பில் தபசில் சொத்து விபரம் குறித்து விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், படந்தால் கிராமம், கிராம நத்தம் சர்வே எண்.626, 2 ஏக்கர, 71 சென்டில் தென்கிழக்கு மூலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தென்மேற்கு மூலையாகும்(சாட்சி ஆவணத்திற்கு முரண்பட்டு திசையானது கூறப்பட்டதை தட்டச்சு பிழை என்று குறிப்பிடுகிறார்).

3) தாவா சொத்து இருக்கும் இடம் ஊஞ்சம்பட்டி என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை, தாய் கிராமம் படந்தால், உட்கடை கிராமம் ஊஞ்சம்பட்டி ஆகும். வா.சா.ஆ.7 ஆன அறிவிப்பில் மூன்று பக்க அளவுகள் மட்டுமே கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் குறித்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். பரப்பளவு வா.சா.ஆ.7 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.7 ஆன அறிவிப்பில் கூறப்பட்டுள்ள நான்குமாலும், பிராதில் கூறப்பட்டுள்ள நான்குமாலும் வெவ்வேறு என்றால் சரியல்ல.

4) வா.சா.ஆ.7 ஆனஅறிவிப்பில் ஒரு தபசில் சொத்தை மட்டும் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆன ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து வழக்கு சொத்து தான் என்பதை குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அறிவிப்பு அனுப்பிய சமயத்தில் கிரையம் பத்திரம் எனது கையில் இல்லாததால் வழக்கு சொத்து எனக்கோ, எனது சின்னம்மாவிற்கோ பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.7 ஆன அறிவிப்பில் மாரியப்ப ரெட்டியாரிடம் வழக்கு சொத்தானது கிரையம் பெற்றதாக கூறப்பட்டுள்ள நிலையில் வா.சா.ஆ.1–ல் ரெங்கப்ப நாயக்கரிடம் கிரையம் பெற்றதாக காட்டப்பட்டுள்ளது என்றால் 1938 மல்லப்ப ரெட்டியார், ரெங்கப்ப நாயக்கருக்கு கிரையம் செய்து கொடுத்தார், மீண்டும் 1945 மல்லப்ப ரெட்டியார் கிரையம் பெற்றார். வழக்கு சொத்தானது ரெங்கப்ப நாயக்கருக்கும், மல்லப்ப ரெட்டியாருக்கும் பாத்தியமில்லை என்றும், வழக்கு சொத்து நத்தம் புறம்போக்கு என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ.1 ல் கூறப்பட்ட சொத்து தான் வழக்கு சொத்து என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் அனுபவத்தின் அடிப்படையில் கூறுகிறேன். வா.சா.ஆ.1 ல் கூறப்பட்ட சொத்தின் நான்குமால்கள் என்ன என்ன என்றால் மேற்கே தண்ணீர் கிணறும், தெற்கே ஓடை, கிழக்கே குமார்ரெட்டியார் காலிமனை, வடக்கே சங்கரலிங்கரெட்டியார் காலிமனை ஆகும். வழக்கு சொத்து சங்கரலிங்க ரெட்டியார் சொத்து என்றால் சரியல்ல.

7) பிரதிவாதிகள் சங்கரலிங்க ரெட்டியாரின் வாரீசுகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அவரது சொத்தை வடக்கு மாலாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தபசில் சொத்து விபரத்தில் பாதை இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.1 வழக்கு சொத்து நான்குமாலில் பிரதிவாதிகளின் வீடு இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வீடு உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தாவா 2 வது அயிட்ட சொத்தை நானோ, எனது

முன்னோர்களோ பாதையாக அனுபவித்து வந்தார்கள் என்று கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

8) வா.சா.ஆ.1 ஆனது 1945ல் இயற்றப்பட்ட நிலையில் அது குறித்து படித்து பார்த்து தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2 (வரைபடம்) ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ள மின் ரூம், பெட்டிகடை, தண்ணீர் குழாய் ஆகியவை பின்னிட்டு பஞ்சாயத்தால் உருவாக்கப்பட்டவை என்றால் சரிதான். மேற்படி கூறியவை போடப்படுவதற்கு முன்னால் அந்த இடம் பஞ்சாயத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கிணறானது முன்பிலிருந்தே பொது கிணறாக இருந்து வருகிறது என்றால் சரிதான்.

9) கிணறும், கிணறு சார்ந்த இடமும் ஊர் மக்கள் பொதுவாக பயன்படுத்தப்படும் இடம் என்றால் சரிதான். தாவா 1வது இலக்க சொத்தும் ஊர் மக்கள் பொதுவாக பாத்தியப்பட்ட பொது இடம் என்றால் சரியல்ல. மேற்படி கூறிய சொத்து பஞ்சாயத்திற்கும், வட்டாட்சியருக்கும் பாத்தியப்பட்டது என்றும், அவர்கள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டால் தான் முழுமையடையும் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கானது உரிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தினால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

10) தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் இரயத்துவாரி புஞ்சை நிலம் உள்ளது என்றால் தெற்கு பக்கம் ஓடையுள்ளது, அதற்கு பின்பு தான் புஞ்சை நிலம் உள்ளது. தாவா சொத்திற்கு தெற்கில் ஓடையுள்ளது, ஓடையின் தெற்கே ஒரு ரோடு உள்ளது, அதற்கு தெற்கே புஞ்சை நிலம் உள்ளது என்றால் சரிதான். ஓடை எத்தனை அடி ஆழம் உடையது என்றால் 10 அடி ஆழம் உள்ளது.

11) ஓடையானது வழக்கு சொத்திற்கு சமநிலையில் உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர் பத்திரத்தின் அடிப்படையில் ஓடையை குறித்து தவறாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு ஓடை வழியாகவும், கிணற்றிற்கு மேற்குபுறமாகவும் செல்லலாம் என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சொத்துக்கள் வீடாக தான் இருந்தது என்றும், தற்போது இடிந்துவிட்ட நிலையில் பிரதிவாதிகள் அனைவரும் பிழைப்பிற்காக வெளியூர் சென்றுவிட்ட நிலையில் பிரதிவாதிகள் சொத்துக்களை பாதுகாக்க வேண்டும்

என்பதற்காக பிரதிவாதிகள் அவர்களது சொத்தை சுற்றி வேலி போட்டு வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

12) பிரதிவாதிகளின் சொத்து வழியாக எந்த காலத்திலும் நாங்கள் பாதையாக உபயோகித்தது கிடையாது என்றால் சரியல்ல. பிராதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடம் வழக்கிற்காக பின்னிட்டு பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ள இறப்பு சான்றிதழான வா.சா.ஆ.2, 3, 4 ஆகியவை இறந்தவர்கள் இறந்த சமயத்தில் அரசு அலுலவர்களால் பதியப்படவில்லை என்றும், வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**(2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டு கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**